**1. இந்தியாவில், ஆயுஷ்மான் பாரத் திவாஸ் கொண்டாடப்படுகிற தேதி எது?**

அ) ஏப்ரல் 25

ஆ) ஏப்ரல் 28

**இ) ஏப்ரல் 30 ☑**

ஈ) மே 02




✓ ஆயுஷ்மான் பாரத் திவாஸ் ஆனது ஏப்ரல்.30 அன்று நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது. ஆயுஷ்மான் பாரத் திட்டமானது, நாட்டின் தொலை தூர பகுதிகளில், எளிதில் கிடைக்கக்கூடிய மற்றும் மலிவு விலையிலா –ன மருத்துவ வசதிகளை வழங்க முற்படுகிறது. இந்தத் திட்டத்தின்கீழ், ஒரு குடும்பத்திற்கு ஆண்டொன்றுக்கு ₹5 இலட்சம் வரை பயன்கள் கிடைக்கப்பெறுகிறது.

---

**2. தில்லி திருத்தச்சட்டம், 2021'இன் தேசிய தலைநகர பிராந்தியத்தி –ன்படி, 'தில்லி அரசு' என்பது எதைக் குறிக்கின்றது?**

அ) தில்லி முதலமைச்சர்

ஆ) தில்லி அமைச்சரவை அமைச்சர்கள்

இ) இந்தியப் பிரதமர்

**ஈ) தில்லியின் துணைநிலை ஆளுநர் ☑**

Government of the National Capital Territory of Delhi

✓ தேசிய தலைநகரமான தில்லி அரசு (திருத்தம்) சட்டம், 2021 நடைமுறை –க்கு வந்துள்ளது. திருத்தப்பட்ட இச்சட்டத்தின்படி, தில்லியில் "அரசு" என்றால் "துணைநிலை ஆளுநர்" என்று பொருள். எந்தவொரு நிர்வாக முடிவையும் எடுப்பதற்கு முன்னர், தில்லி யூனியன் பிரதேசத்தின் தேர்ந் –தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தில்லி துணைநிலை ஆளுநரின் கருத்தை நாடவேண்டும்.

---

**3.அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட ஊசித்தட்டான்களின் இரண்டு புதிய இனங்கள் (*Euphaea thosegharensis மற்றும் Euphaea pseudodi –spar*) இந்தியாவின் எந்தப் பகுதியைச் சார்ந்தவையாகும்?**

அ) தீபகற்பம்

ஆ) சுந்தரவனக்காடுகள்

**இ) மேற்குத்தொடர்ச்சி மலைகள் ☑**

ஈ) இமயமலை



✓ இந்திய ஆராய்ச்சியாளர்கள் மகாராஷ்டிர மாநிலம் சதாரா மாவட்டத்தில் *Euphaea thosegharensis* & *Euphaea pseudodispar* எனப் பெயரிடப்பட்ட 2 புதிய வகை ஊசித்தட்டான்களைக் கண்டுபிடித்துள்ளனர். மேற்குத்தொ –டர்ச்சி மலைகளை ஆதியாகக்கொண்ட இவை, யூபியா இனத்தைச் சார்ந்த பெரிய பூச்சிகளாகும்.

---

**4. "வளரும் ஆசியாவின் பொருளாதாரக் கண்ணோட்டம்" என்ற அறிக்கையை வெளியிட்டுள்ள நிறுவனம் எது?**

அ) உலக வங்கி

ஆ) புதிய வளர்ச்சி வங்கி

**இ) ஆசிய வளர்ச்சி வங்கி ☑**

ஈ) பன்னாட்டுச் செலவாணி நிதியம்

ADB

✓ ஆசிய வளர்ச்சி வங்கியானது அண்மையில், "வளரும் ஆசியாவின் பொருளாதார கண்ணோட்டம்" என்ற தலைப்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையின்படி, கடந்த 2020ஆம் ஆண்டில் ஆசியாவின் பொருளாதாரம் 0.2% அளவுக்கு சுருங்கியது. 2020'இல் 2.8 சதவீதமாக இருந்த ஆசியாவின் சராசரி பணவீக்கம், 2021'ஆம் ஆண்டில் 2.3 சதவீதமாகக் குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

---

**5. சுங்க குற்றங்களைத் தடுப்பதற்காக இந்தியாவிற்கும் எந்த நாடு / நாடுகளுக்கும் இடையிலான ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது?**

அ) ஆஸ்திரேலியா

ஆ) USA மற்றும் ஜப்பான்

**இ) UK மற்றும் வட அயர்லாந்து ☑**

ஈ) பிரேசில் & தென் கொரியா

✓ சுங்க ஒத்துழைப்பு மற்றும் சுங்கத்துறை விஷயங்களில் பரஸ்பர நிர்வா –க உதவியை மேற்கொள்ள இங்கிலாந்து மற்றும் வடக்கு அயர்லாந்து ஆகியவற்றுடன் ஒப்பந்தம் செய்ய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித் –துள்ளது. இந்த ஒப்பந்தம் இருநாடுகளின் சுங்க அதிகாரிகள் இடையே தகவல்களையும், உளவுத்தகவல்களையும் பகிர்ந்துகொள்ள சட்ட விதிமு –றையை வழங்கும். சுங்க விதிகளை முறையாக அமல்படுத்தி, சுங்க குற்றங்களைத் தடுக்கவும் விசாரிக்கவும் உதவும். மேலும், சட்ட ரீதியான வர்த்தகத்துக்கும் இது உதவும். இந்த ஒப்பந்தத்தின் வரைவு, இரு நாட்டு சுங்க நிர்வாகத்தின் ஒப்புதலுடன் இறுதி செய்யப்பட்டுள்ளது.

---

**6. சமீபசெய்திகளில் இடம்பெற்ற யான்பு துறைமுகம் அமைந்துள்ள நாடு எது?**

அ) ஆப்கானிஸ்தான்

**ஆ) சவுதி அரேபியா ☑**

இ) சூடான்

ஈ) சாட்



✓ யான்பு என்பது சவுதி அரேபியாவின் மேற்குப் பகுதியின் செங்கடல் கடற் கரையில் அமைந்துள்ள ஒரு துறைமுக நகரமாகும். அண்மையில், வெடிபொருட்கள் நிரம்பிய தானியங்கி படகு ஒன்று செங்கடலில் உள்ள யான்பு துறைமுகத்திற்கு அருகே கண்டுபிடிக்கப்பட்டது.

✓ குண்டுவெடிப்புக்கு காரணமாக அமைந்த அந்தப் படகை, சவுதி அரேபியா தடுத்து தாக்கியழித்ததாகக் கூறியுள்ளது.

---

**7. 'உலக டுனா நாள்' 2021 மே.3 அன்று அனுசரிக்கப்பட்டது. டுனா சார்ந்த இனம் எது?**

அ) பறவை

**ஆ) மீன் ☑**

இ) பூச்சி

ஈ) ஊர்வனம்



✓ உலக டுனா நாளானது 2021 மே.3 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்பட்டது. டுனா, ஒமேகா–3 நிறைந்த ஒரு மீனினமாகும். இந்த வகை மீன்களில் தாதுக்கள், புரதங்கள் மற்றும் வைட்டமின் B12 உள்ளி –ட்ட அதிக ஊட்டச்சத்துகள் இருப்பதால், அதிகப்படியான நுகர்வின் கார –ணமாக இவ்வினம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகிறது. கடந்த 2016ஆம் ஆண்டு டிசம்பரில், ஐநா பொது அவையானது மே.3ஆம் தேதியை உலக டுனா நாளாக அறிவித்தது.

---

**8. WHO மற்றும் அவற்றின் கூட்டாளர்களால் (UNICEF மற்றும் GAVI) முன்மொழியப்பட்ட நோய்த்தடுப்பு நிரல், எந்த ஆண்டுக்குள் ஐம்பது மில்லியன் உயிர்களை காப்பாற்ற நோக்கம் கொண்டுள்ளது?**

அ) 2022

ஆ) 2025

**இ) 2030 ☑**

ஈ) 2040



✓ உலக நலவாழ்வு அமைப்பு (WHO) மற்றும் அதன் கூட்டாளர்களான ஐநா சிறார்கள் முகமை மற்றும் தடுப்பூசி கூட்டாளரான GAVI ஆகியவை ஒரு புதிய உலகளாவிய தடுப்பூசி உத்தியை வகுத்துள்ளன – நோய்த்தடுப்பு நிரல் 2030 (IA2030). ஏழை நாடுகளில் உள்ள 75% குழந்தைகள் உட்பட, 2030'ஆம் ஆண்டிற்குள் ஐம்பது மில்லியன் உயிர்களைக் காப் –பாற்றுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த உத்தியானது உலகளவில் நிலவும் அம்மை மற்றும் பிற நோய்களுக்கு எதிரான தடுப்பூசி இயக்கங்களை அதிகரிக்கச் செய்கிறது.

---

**9. இந்திய நிதிச்செயலாளரை நியமிப்பதற்கு ஒப்புதல் அளிக்கின்ற அமைப்பு எது?**



அ) இந்திய உச்சநீதிமன்றம்

**ஆ) அமைச்சரவை நியமனக்குழு ☑**

இ) நிதியமைச்சகம்

ஈ) மக்களவை

✓ தற்போதைய செலவின செயலாளர் T V சோமநாதனை இந்திய அரசின் நிதிச்செயலாளராக நியமிக்க அமைச்சரவையின் நியமனக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. இது தொடர்பாக பணியாளர் அமைச்சகம் உத்தரவு பிறப்பி–த்துள்ளது. இவர், 1987ஆம் ஆண்டு, தமிழ்நாட்டுப் பிரிவைச் சாரந்த இந்திய ஆட்சிப் பணி (IAS) அதிகாரியாவார்.

---

**10. 'உலகளாவிய வன இலக்குகள் அறிக்கை–2021'ஐ வெளியிட்ட அமைப்பு எது?**

அ) WWF

**ஆ) UN ECOSOC ☑**

இ) UNEP

ஈ) UNDP

ECOSOC

✓ 'உலகளாவிய வன இலக்குகள் அறிக்கை – 2021' அறிக்கையை ஐநா அவையின் பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறை தயாரித்து வெளியிட்டுள்ளது. ஐநா அமைப்பின் காடுகளுக்கான உத்தி திட்டம் 2030'இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி ஆறு உலகளாவிய வன இலக்குகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய 26 இலக்குகளை அடைவதற்கான முன்னேற்றம் குறித்த ஒரு கண்ணோட்டத்தை இந்த அறிக்கை வழங்கு–கிறது. 2030ஆம் ஆண்டுக்குள் வனப்பகுதியை 3% வரை அதிகரிப்பது முதல் உலகளாவிய வன இலக்கு ஆகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. சென்னை அணுமின் நிலையத்துக்கு – புதிய இயக்குநர் நியமனம்:**

கல்பாக்கத்தில் இயங்கிவரும் சென்னை அணுமின் நிலையத்தின் நிர்வா–க இயக்குநர் பணி ஓய்வுபெற்றதால், புதிய இயக்குநராக M பலராமமூர்த்–தி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

---

2. சேதி தெரியுமா?

**ஏப். 24:** கரோனா நோயாளிகளுக்கான அவசர சிகிச்சைக்கு 'விரஃபின்' ஊசி மருந்தைப் பயன்படுத்த இந்திய மருந்துக் கட்டுப்பாட்டு இயக்குநரகம் அனுமதி அளித்தது.

**ஏப். 24:** இந்தோனேசிய கடற்படையைச் சேர்ந்த KRI நங்காலா 402 என்கிற நீர்மூழ்கிக் கப்பல் 53 பேருடன் பாலி தீவு அருகே மாயமானது.

**ஏப். 24:** உச்சநீதிமன்ற 48ஆவது தலைமை நீதிபதியாக என்.வி. ரமணா பொறுப்பேற்றார்.

**ஏப்.24:** மின்னணு முறையில் சொத்துக்கான அட்டை வழங்கும் 'ஸ்வமித்வா யோஜனா' திட்டம் தொடங்கப்பட்டது.

**ஏப்.25:** நாடு முழுவதும் புதிதாக 551 மருத்துவ ஆக்சிஜன் உற்பத்தி நிலையங்களை அமைக்க மத்திய அரசு உத்தரவிட்டது.

**ஏப்.25:** உச்சநீதிமன்ற நீதிபதி மோகன் எம் சந்தான கவுடர் காலமானார்.

**ஏப்.26, 27:** ஆக்சிஜன் தயாரிக்க ஸ்டெர்லைட் ஆலையைத் திறப்பது என முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அனைத்துக் கட்சி கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. ஸ்டெர்லைட் ஆலை ஜூலை 31 வரை செயல்பட உச்சநீதிமன்றம் அனுமதியளித்தது.

**ஏப்.27:** கவுதமாலா உலகக்கோப்பை வில்வித்தை முதல்நிலை போட்டியில் இந்தியாவின் தீபிகாகுமாரி, அதானு தாஸ் ஆகியோர் தங்கம் வென்றனர்.

**ஏப்.28:** இந்தியாவின் சுவாதி தியாகராஜன் தயாரிப்பு மேலாளராகப் பணி–யாற்றிய 'மை ஆக்டோபஸ் டீச்சர்' என்கிற ஆவணப்படத்துக்கு ஆஸ்கர் விருது அறிவிக்கப்பட்டது.

**ஏப்.29:** இந்திய வகையைச் சேர்ந்த B.1.617 என்ற இருமுறை உருமாறிய கரோனா வைரஸ் 17 நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளது.

**ஏப்.30:** தமிழ்த்திரைப்பட ஒளிப்பதிவாளரும் இயக்குநருமான K V ஆனந்த் காலமானார்.

**மே.2:** ஐந்து மாநில சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் வெளியாகின: தமிழ்நாடு – தி.மு.க., கேரளம் – இடது ஜனநாயக முன்னணி, மேற்கு வங்கம் – திரிணமூல் காங்கிரஸ், அஸ்ஸாம் – பா.ஜ.க. கூட்டணி, புதுச்சேரி – NR காங்கிரஸ் கூட்டணி ஆகியவை ஆட்சியைப் பிடித்தன.

---